# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 23/2018 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | செல்வமணி | நாள் | 10.01.2024 |
| தகப்பனார் பெயர் | செல்லப்பன் | | |

**பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை:–**

1) நான் எங்கு வசித்து வருகிறேன் என்றால், நரியனூர் கீழ்காடு பகுதியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என்னை யார் சாட்சி சொல்ல அழைத்து வந்தது என்றால், வாதி அழைத்து வந்தார். என் பிரமாண வாக்கு மூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை வழக்கறிஞரிடம் யார் சொன்னது என்றால், வாதிதான் சொன்னார்.

2) வாதி என் உறவினரா என்றால் இல்லை. பக்கத்து நிலத்துக்காரர். வாதியின் தாயார் சொத்தைவிலைக்கு வாங்கியதாக நான் சொல்லியுள்ள நிலையில், எவ்வளவு நிலத்தை யாரிடமிருந்து விலைக்கு வாங்கினார் என எனக்கு தெரியுமா என்றால், எவ்வளவு நிலம் என தெரியாது. ஆனால் மேற்படி நிலத்தை பரமசிவம், சிவசாமி, கோவிந்தராஜ், பாஸ்கர் ஆகியோரிடமிருந்து விலைக்கு வாங்கினார். எந்த தேதியில் விலைக்கு வாங்கினார் என்றால், தேதி மாதம் தெரியாது. ஆனால் 2003 ம் வருடத்தில் விலைக்கு வாங்கினார்.

3) மேற்படி 2003 ம் வருட கிரையப்பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேனா என்றால், இல்லை. மேற்படி ஆவணம் எந்த தேதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. என் பிரமாண பத்திரிக்கையில், தாவா சொத்தின் சர்வே எண்.194 ல் உள்ளதாக சொல்லியுள்ள நிலையில், மேற்படி சர்வே எண்ணில் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என எனக்கு தெரியுமா என்றால், தெரியாது.

4) வாதியின் பாட்டனார் பெயர் என்னவென்றால், சோமசுந்தரம். மேற்படி சோமசுந்தரத்துடன் பிறந்தவர்கள் யார் யார் என்றால், மொத்தம் 4 நபர்கள். அவர்களில்

பரமசிவம் என்ற ஒரு சகோதரர் பெயர் மட்டும்தான் எனக்கு தெரியும். மற்றவர்கள் பெயர் எனக்கு தெரியாது. மேற்படி சோமசுந்தரத்தின் தந்தை பெயர் அப்புசாமி. மேற்படி அப்புசாமிக்கு 1.குருசாமி, 2.சோமசுந்தரம், 3. லிங்குசாமி, 4.பரமசிவம்(1ம்பிரதிவாதி), 5.மயில்சாமி ஆகியோர்கள் உள்ளனர் என்றால், சரிதான். அதில் குருசாமியும், லிங்குசாமியும் தற்போது இறந்துவிட்டனர்.

5) நான் சொல்வது தவறானது என்றாலும், குருசாமியும், சோமசுந்தரமும் தான் இறந்துவிட்டனர் என்றால், ஆமாம். யார் இறந்துவிட்டனர் என எனக்கு சரியாக நினைவில்லை. மேற்படி 5நபர்களும் தங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை வாய்மொழியாக பாகபிரிவினை செய்து கொண்டனர் என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. அவ்வாறு குருசாமிக்கு பிரிந்த சொத்துக்களை மேற்படி குருசாமியின் வாரிசுகள் தேவன், சீனிவாசன், பச்சியப்பன் ஆகியோர் அனுபவித்து வருகின்றனர் என்றால், சரிதான்.

6) மேற்படி சோமசுந்தரத்திற்கு எத்தனை வாரிசுகள் என்றால், 2 வாரிசுகள். மேற்படி நபர்கள் சிவசாமி மற்றும் ஆசைதம்பி என்றால், சரிதான். மேற்படி 2நபர்களும் சோமசுந்தரம் இறந்ததற்கு பின்னிட்டு அவரது பாக சொத்தை வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டு அனுபவித்து வந்தனர் என்றால், அந்த விவரம் எனக்கு தெரியாது. மேற்படி சங்கதிகள் எதுவும் தெரியாமல், அவை குறித்து எனக்கு தெரியுமென என் முதல் விசாரணை சாட்சியத்தில் நான் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால், சரியல்ல.

7) மேற்படி குருசாமியின் வாரிசுகளும், சோமசுந்தரத்தின் வாரிசுகளும் அவரவர்களுக்கு பிரிந்த பாகத்தின் வழியாக 10அடி அகலத்தில் செல்லும் பாதையை சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தி வருகின்றனர் என்றாலும், மேற்படி பாதையைத்தான் வாதியும் பயன்படுத்தி வருகிறார் என்றாலும், மேற்படி பாதை கூணாண்டியூரிலிருந்து மல்லிகுந்தம் செல்லும் பிரதான தார் சாலையை சென்றடைகிறது என்றாலும், சரியல்ல. குருசாமியின் வாரிசுகளும், சோமசுந்தரத்தின்

வாரிசுகளும் மேற்படி தடவழியைத்தான் பயன்படுத்தி வருகின்றனர் என்றாலும், அதை தவிர வேறு மாற்று தடவழி இல்லையென்றாலும், மேற்படி 10 அடி அகல பாதையை தவிர மற்ற பங்குதாரர்களான லிங்குசாமி, பரமசிவம் மற்றும் மயில்சாமி ஆகியோர்களின் பாகநிலத்திலோ அல்லது இவ்வழக்கிலுள்ள 2, 3 பிரதிவாதிகளின் நிலங்களிலோ வேறு எந்த தடவழியும் இல்லை என்றாலும், கூணாண்டியூர் தார் சாலைக்கு தென்வடலாக செல்லும் மேற்படி 10 அடி அகலபாதையை தவிர வேறு பாதை இல்லையென்றால், சரிதான்.

(பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.2 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.